## மொரவெவ பிரதேச சபை
## திருகோணமலை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 யூன் 07 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2020 ஆகஸ்ட் 27 மற்றும் 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதிகளில் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மொரவெவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிலே ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திடப்பட்டுள்ள 07 நிர்மாண ஒப்பந்தங்களுக்காக சனாதிபதி நிதியத்தால் பெறவேண்டிய ரூபா 8,444,805 பெறப்பட வேண்டிய கணக்குகளிலும் அந்த ஒப்பந்தத்திற்காக ரூபா 8,444,805 செலுத்தப்பட வேண்டிய கணக்குகளிலும் கைவிடப்பட்டிருந்தது. | கணக்குகளில் சீர் செய்யப்பட வேண்டும். | 2020 இறுதிக் கணக்குகள் செய்யப்படும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். |
| (ii) | 2018 ஆம் ஆண்டிற்குரிய பெறப்பட்ட ரூபா 78,110 முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டிலே வருமான கணக்கிற்கு காட்டப்பட்டிருந்தது. | கால எல்லைக்குட்பட்ட அனைத்து வருமானங்களும் செலவினங்களும் சீர் செய்யப்பட வேண்டும். | 2020 இறுதிக் கணக்குகள் செய்யப்படும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். |
| (iii) | மீளாய்வாண்டிலே கடை வாடகை வருமானம் ரூபா 247,795 வினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | கணக்குகளில் சீர் செய்யப்பட வேண்டும். | முன்னைய வருடத்திற்காக அறவிடப்பட வேண்டிய வாடகை 2019 ஆம் ஆண்டின் வாடகையான குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 2020 |

| | | | |
|---|---|---|---|
| | | | இறுதிக் கணக்குகள் செய்யப்படும் போது சரி செய்வேன். |
| (iv) | நீர் குழாய்கள் சேதம் ஏற்பட்டதற்காக ரூபா 160,714 ஆன சேதம் மீள் நிரப்பப்பட்ட தொகை வைப்புக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்டது. | கணக்குகளில் சீர் செய்யப்பட வேண்டும். | 2020 இறுதிக் கணக்குகள் செய்யப்படும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். |
| (vi) | கடை வாடகை சீர் செய்யப்படாமல் ரூபா 147,861 தொகை வருடத்தின் வைப்புக்கள் மீதியில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வருடம் இடத்தில் கணக்குகளில் சீர் செய்யப்பட வேண்டும். | கணக்கிடும் போது தவறவிடப்பட்டுள்ளது. 2020 இறுதிக் கணக்குகள் செய்யப்படும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். |
| (vii) | நிலையான சொத்துக்களின் கீழ் காட்ட முடியாத ரூபா 607,500 பெறுமதியான 17 உருப்படிகள் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வருடம் இடத்தில் கணக்குகளில் சீர் செய்யப்பட வேண்டும். | 2020 இறுதிக் கணக்குகள் செய்யப்படும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். |
| (viii) | தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வட்டி மற்றும் கடன் தவணைப் பணத்தின் கூட்டுத்தொகை மூலதனக் கடனுக்குக் கீழ் காட்டப்பட்டுள்ள போது நடைமுறைப் பொறுப்பின் கீழ் ரூபா 362,854 செலுத்தப்பட வேண்டிய கடன் வட்டியாக அந்த வட்டித்தொகை மீண்டுமொரு முறை காட்டப்பட்டிருந்தது. | கணக்குகளில் சீர் செய்யப்பட வேண்டும். | மீண்டும் தேடிப்பார்த்து இரண்டு முறை கணக்கிடப்பட்டிருந்ததால் 2020 இறுதிக் கணக்குகள் செய்யப்படும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். |

**(ஆ) இணக்கப்பாடின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பேரேட்டின் படி நானாவித வைப்பு மீதியானது ரூபா 694,894 இருந்தது ஆனால் ஐந்தொகையில் இம்மிதியானது ரூபா. 1,286,344இருந்து அதன் படி இரண்டிற்கும் இடையிலான வேறுபாடாக ரூபா. 591,450 காணப்பட்டது. | சரியான வைப்புக்களின் மீதி கணக்குகளுடன் சமர்ப்பிக்க வேண்டும். | மீள் பரிசோதனை செய்து மற்றும் மேலதிக வைப்புத் தொகை நீக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் |

**(இ) தொங்கற் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2011 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டுவரும் ரூபா 7,864,759 ஆன தொங்கற் கணக்கின் செலவு மீதியை சீராக்கி தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தொங்கற் கணக்கின் செலவு மீதி எது விடயமானது என்பதை சரியாக அடையாளங் காண முடியாதுள்ளது. எதிர்காலத்தில் தீர்வு காண்பதற்கு முயற்சி எடுப்பேன். |

**(ஈ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காததன் காரணமாக ரூபா 94,035,781 ஆன சொத்துக்கள் மீதியை கணக்காய்வின் போது திருப்திகரமாக அவதானிக்க முடியாதுள்ளது | பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு முறையாக வருடாந்தம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சொத்துக்கள் உப பதிவேட்டிற்கு உட்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சரியான பதிவேடுகளில் பராமரிக்க முடியும். |

**(உ) தீர்க்கப்படாமல் முன் கொண்டுவரப்பட்ட மீதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | வருமானக் கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 950,536 தொகையை தீர்வுக்குட்படுத்தாமல் 10 வருடங்களிலும் அதிக காலமாக முன்கொண்டுவரப்பட்டு காணப்படுகின்றது. | தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வருமானக் கடன்பட்டோர் மீதி எது விடயமானது என்பதை சரியாக அடையாளங் காணமுடியாதுள்ளது. எதிர்காலத்தில் தீர்வு காண்பதற்கு முயற்சி எடுப்பேன். |
| (ii) | முற்பணமாக வழங்கப்பட்டுள்ள 1,826,485 மீதியொன்றை தீர்வுக்குட்படுத்தாமல் 2017 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்டு காணப்படுகின்றது. | தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சரியாக அடையாளங் காண முடியாதுள்ளது. எதிர்காலத்தில் தீர்வு காண்பதற்கு முயற்சி எடுப்பேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இனங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் சட்டம் | | | |
| (i) 24 ஆவது பிரிவு | பாதைகள் இன்வென்டிக்கு மற்றும் வர்த்தமானி அறிவித்தலுக்குபட்டுத்த நடவடிக்கை மேற்கொண்டிருக்க வில்லை. | இன்வென்ட்ரிக்குட் படுத்தி வர்த்தமானி அறிவித்தலுக்குட் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இன்வென்ட்ரி தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த வருட இறுதியில் வர்த்தமானி அறிவித்தலுக்குட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) 159 ஆவது பிரிவு | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,771,241 நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒரு பகுதி அறவிடப்பட்டிருப்பதுடன் முழுமையான தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | | |
| (i) 217 ஆவது விதி | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டு வருவதுடன் அது நாளதுவரையாக்கப்படவில்லை . எதிர்காலத்தில் அதை சரி செய்வேன். |
| (ii) 218 ஆவது விதி | அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களை வருடாந்தம் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வருடங்களிலிருந்து சரியாக நடவடிக்கை மேற்கொள்வேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 571 | 2 வருடங்கள் கடந்த ரூபா 1,079,630 ஆன பொது வைப்புக்கள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அந்த வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்னர் சரிசெய்வேன். |
| (ii) | நிதிப்பிரமாணம் 1645(ஆ) மற்றும் 1646 | 05 வாகனங்களின் ஓட்டக்குறிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உத்தியோகத்தர்களின் தவறின் காரணமாக அப்படி நிகழ்ந்துள்ளது. எதிர்காலத்தில் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிஞ்சிய செலவு ரூபா 686,205 ஆக இருந்ததுடன், இதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 324,795 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு மற்றும் முன்னைய வருடத்திற்குரிய சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2018 | | | | 2019 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 |
| வாடகை | 5,360 | 2,408 | 2,183 | 225 | 1,330 | 1,105 | 1,064 | 129 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 50 | 166 | 166 | - | 300 | 171 | 169 | 18 |
| வேறு வருமானங்கள் | 3,571 | 3,569 | 3,569 | - | 5,300 | 4,667 | 2,445 | 2,508 |
| மொத்தம் | 8,981 | 6,143 | 5,918 | 225 | 6,930 | 5,943 | 3,678 | 2,655 |

#### 2.2.2 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 129,928 கடை வாடகை வருமானம் நிலுவையாக காணப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 112,466 பெறுமதி முன்னைய வருடத்தின் நிலுவை வருமானமாகும். | சரியான நிலுவை வருமானத்தை அடையாளங் கண்டு தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | முன்னைய வருடத்தின் நிலுவை வருமானத்தை சரியாக அடையாளங் காண முடியாதுள்ளது. எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

#### 2.2.3 வாகன வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வாகன வாடகை வருமானம் ரூபா 567,680 பணம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் சபை அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு பகுதி தற்போது அறவிடப்பட்டுள்ளது. |

#### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,055,133 நிலுவை நீதிமன்ற தண்டப்பணமொன்றை 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு பகுதி தற்போது அறவிடப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பண்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள் சம்பந்தமான காரணங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய விடயங்கள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான விடயங்கள் 28ஐ நிறைவேற்றுவதற்காக உப விதிகள் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்தும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | 06 உப விதிகள் அங்கீகரிக்கப் பட்டுள்ளன. இறுதி அங்கீகாரம் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் வருடத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயார்படுத்தப் பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயார்ப்படுத்தப்பட வேண்டும். | 2020 ஆம் வருடத்திலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம், இலக்கு மற்றும் உரிய நிரல்கள் மீளாய்வாண்டிலே அடையாளம் கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். | சபையில் காணப்படுகின்ற பொருளாதார நிலையின் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நிரல்கள் தொடர்பாக எவ்வித வேலைத் திட்டங்களையும் நடைமுறைப் படுத்துவதற்கு போதுமான நிதிஏற்பாடுகள் சபையிடம் காணப்படவில்லை. |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 07 பதவிகளுக்கு 08 குறைபாடுகள் உள்ளது. 05 வருடங்களுக்கு அதிகமான காலத்திலிருந்து காணப்படுகின்ற மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பல தடவைகள் கோரிக்கை விடப்பட்டிருந்தும் இதுவரை வெற்றிடங்களை நிரப்புவதற்கு / ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளாததன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. |

### 3.2.1 ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சேவையை விட்டுச் சென்ற நான்கு ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 100,145 அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | அறவிடப்படவுள்ள கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அந்த நான்கு ஊழியர்களினதும் வதிவிடங்களை இதுவரை சரியான அடையாளங் காண முடியாதுள்ளது. அதனால் அந்த பணத்தை அறவிட முடியாதுள்ளது. எதிர்காலத்தில் முறையான அங்கீகாரத்தைப் பெற்று தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 510,000 பெறுமதியான குப்பை கூழங்களை கொட்டுகின்ற 57 தொட்டிகளில் 24 தொட்டிகள் 2020 யூலை 30 ஆந் திகதியிலும் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் சபையில் விளைவற்று காணப்படுகின்றது. | தேவையை அடையாளங் கண்டு தாமதமின்றி குப்பை தொட்டிகளை விநியோகிக்க வேண்டும். | விடையளிக்கப்பட வில்லை. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 உரிமை மாற்றப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான காணிகளில் சபையினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது ரூபா 55,520,622 பெறுமதிக்குரிய கட்டிடம், விளையாட்டு மைதானம், பொதுக் கிணறு, சனசமூக நிலையம், நீர்த்தாங்கி மற்றும் பொதுச்சந்தை ஆகியன தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் இந்த காணிகளின் சட்டபூர்வமான உரிமையை சபைக்கு மாற்றியிருக்கவில்லை. | காணிகளினை உரிமையை சபைக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். | உரிய காணிகளின் உரிமையை சபைக்கு மாற்றிக் கொள்வதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |

### 3.4.2 குறைப்பயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த 06 வருடங்களாக பாவனையிலிருந்து ஒதுக்கிய பிகப் வாகனத்தை உரிய முறையில் நீக்குவதற்கு அல்லது திருத்தப்பட்டு பாவனைக்குட்படுத்தப்படாமல் சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | உரிய முறையில் நீக்குவதற்கு அல்லது திருத்தங்களை மேற்கொண்டு பாவனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். | இந்த வாகனத்தின் உரிமையாளரை சரியாக அடையாளங் காண முடியாதுள்ளது. உதவி பிரதான செயலாளர் (பொருளியலாளர் சேவை) அலுவலகத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் சபை வளாகத்தில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. | திருத்தங்களை மேற்கொண்டு பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 02 வாகனங்களையும் திருத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நிதி வசதியீனம் காரணமாக திருத்த வேலைகள் தாமதமாகின்றன. |

### 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தரின் அறியாமையினால் தயாரிக்கப்படவில்லை. 2020 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 3.6 வாகன நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. | வருமான அனுமதிப்பத்திரம் உரிய வருடங்களில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்வரும் காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிலே சபைக்கு சொந்தமான ஓட்டத்தரத்திலுள்ள 03 மோட்டார் வாகனங்களுக்காக காப்புறுதிப் பத்திரமொன்று பெறப்பட்டிருக்கவில்லை. | காப்புறுதிப் பத்திரமொன்று உரிய வருடங்களில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்வரும் காலத்தில் காப்புறுதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். |

## 3.7 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9.1 இன் பிரகாரம் சங்கங்களுக்கு சுங்க அதிகார எல்லைக்குள் காணப்பட வேண்டுமெனினும் 04 ஒப்பந்தங்கள் சங்கங்களின் அதிகார எல்லைக்கு வெளியே ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது. | சங்கங்களின் அதிகார எல்லைக்கு வெளியே சங்கங்களுக்கு நிர்மாண ஒப்பந்தங்கள் வழங்கப்படக் கூடாது | சங்கங்களின் செயற்திறன்களையும் மற்றம் செயற்பாடுகளையும் கவனித்து பார்த்து அந்த ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டது. இனிவரும் காலங்களில் அப்படி நடக்காமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்வேன். |
| (இ) | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் நிதிப் பிரமாண 1/2012 இலக்கமுடைய 2012 சனவரி 05 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின் 3.1 இன் பிரகாரம், நிதி வல்லமை பரிசீலிக்கப்படாமல் ரூபா 99,474 இலிருந்து ரூபா 488,458 வரையுள்ள சேமிப்பு வங்கி மீதியை கொண்டுள்ள சங்கங்களுக்கு ரூபா மில்லியனை விஞ்சிய ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்று நிருபத்தின் பிரகாரம் நிதி வல்லமை பரிசீலிக்கப்பட்டு ஒப்பந்தங்கள் வழங்கப்பட வேண்டும். | செயற்திறன்களையும் மற்றும் செயற்பாடுகளையும் கவனித்துப் பார்த்து அந்த ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டது. இனிவரும் காலங்களில் முறையாக நிதி நிலைமைகளை பரிசீலனை செய்து ஒப்பந்தங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பினும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை | உள்ளக கணக்காய்வு பிரிவை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். உள்ளக கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நடைமுறைப் படுத்தக் கூடிய நிலையில் இல்லை இனிவரும் காலங்களில் முறையாக நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | 2019 வருடத்திலே மூன்று தடவைகள் கூட்டப்பட்டுள்ளன. கணக்காய்வு உத்தியோகத்தர்கள் அழைக்கப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் சரியாக இடம்பெறும். |